# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்)

***2011 வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகளில் வரவுசெலவுத் திட்டப் பிரேரணையொன்றைப் பின்பற்றி ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச்சட்டத்தினதும் கடல்கடந்த ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச்சட்டத்தினதும் சட்டவாக்கத்தினின்றெழும் குறித்தசில விளைவாந்தன்மையினவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.***

*பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2011, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, மாச்சு மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***100 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 6.00*** ***தபாற் செலவு : 5.00***

2 - PL 005699 - 650 (2011/04)

**ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்)**

*ச.வ.–ஒ. 26/2011*

***2011 வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளில் வரவு செலவுத் திட்டப் பிரேரணையொன்றைப் பின்பற்றி ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச்சட்டத்தினதும் கடல்கடந்த ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டத்தினதும் சட்டவாக்கத்தினின்றெழும் குறித்தசில விளைவாந்தன்மையினவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2011ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஜமிச்சங்களைத் தவிர்த்தல்.*

**2.** ஜமிச்சங்களைத் தவிர்ப்பதற்கு இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகள், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்கள் தொடர்பிலும் குறிப்பாக, சட்டங்களின் நிர்வாகத்துடன் செயல்தொடர்புடைய ஏற்பாடுகள், அதன் ஏற்புடைமை, உறுப்பாண்மை, உதவுதொகைகள் அத்துடன் உதவு தொகைகளை சேகரிக்கும்முறை என்பன தொடர்பாகவும் ஏல்தகவுடையதாக மாட்டாது எனக் கருதப்படுதல் வேண்டும்.

*முதலாம் அட்டவணையைப் பாராளுமன்றத் தீர்மானத்தால் திருத்துதல்.*

**3.** (1) பாராளுமன்றம், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையையும் இரண்டாம் அட்டவணையையும், ஓய்வூதியங்களின் கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளில் செய்யப்படக்கூடிய மாற்றங்களுக்குப் பயனளிப்பதற்காக மேற்கூறப்பட்ட அட்டவணைகளுடன் ஏதேனும் சட்டத்தைச் சேர்ப்பதன்மூலம் அல்லது அதிலிருந்து ஏதேனும் சட்டத்தை விட்டு விடுவதன்மூலம், தீர்மானத்தினால் திருத்தலாம்.

2 - PL 005699 - 650 (2011/04)

(2) முதலாம் அட்டவணையையும் இரண்டாம் அட்டவணையையும் திருத்த விழையும் தீர்மானம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைக்கிணங்க அங்கீகரிக்கப்படுவதன்மீது அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தை சுட்டிக் காட்டுகின்றவாறான அத்தகைய முறையில் தீர்மானத்தின் உள்ளடக்கத்தைத் தரும் அறிவிப்பொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

## முதலாம் அட்டவணை

### சட்டவாக்கத்தின் பெயர்

1 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம்.

2. 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம்.

## இரண்டாம் அட்டவணை

### சட்டவாக்கத்தின் பெயர்

1. 2011ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் சட்டம்.

2. 2011ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடல்கடந்த ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் சட்டம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்